# இன்றைய இறைவார்த்தை

# 07-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 14ஆம் வாரம் – செவ்வாய்**
**முதல் ஆண்டு**

**முதல் வாசகம்:**

உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, "இஸ்ரயேல்" எனப்படும்.
ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்.

**தொடக்க நூலிலிருந்து வாசகம். 32 : 22 – 32**

யாக்கோபு எழுந்து, தம் இரு மனைவியரையும் இரு வேலைக்காரிகளையும் புதல்வர் பதினொருவரையும் அழைத்துக் கொண்டு யாபோக்கு ஆற்றின் துறையைக் கடந்தார். அப்படி அவர்களை ஆற்றைக் கடக்கச் செய்தபோது, தமக்கிருந்த அனைத்தையும் அனுப்பி வைத்தார். யாக்கோபு மட்டும் இவ்வாறு தனித்திருக்க, ஓர் ஆடவர் பொழுது விடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார். யாக்கோபை வெற்றி கொள்ள முடியாது என்று கண்ட அந்த ஆடவர் அவரது தொடைச்சந்தைத் தொட்டார். யாக்கோபு அவரோடு மற்போரிடுகையில் தொடைச்சந்து இடம் விலகியது. அப்பொழுது ஆடவர் "என்னைப் போக விடு. பொழுது புலரப்போகிறது" என, யாக்கோபு, "நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்" என்று மறுமொழி சொன்னார். ஆடவர், "உன் பெயர் என்ன?" என, அவர்: "நான் யாக்கோபு" என்றார். அப்பொழுது அவர், "உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, "இஸ்ரயேல்" எனப்படும். ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" என்றார். யாக்கோபு அவரை நோக்கி, "உம் பெயரைச் சொல்லும்" என்றார். அவர், "என் பெயரை நீ கேட்பதேன்?" என்று, அந்த இடத்திலேயே அவருக்கு ஆசி வழங்கினார். அப்பொழுது யாக்கோபு, "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்" என்று சொல்லி, அந்த இடத்திற்குப் "பெனியேல்" என்று பெயரிட்டார். அவர் பெனியேலுக்கு அப்பால் சென்றவுடன் கதிரவன் தோன்றினான். தொடை விலகியதால் அவரும் நொண்டி நொண்டி நடந்தார். அதன் பொருட்டு, இஸ்ரயேலர் இந்நாள் வரை தொடைச்சந்துச் சதை நாரை உண்பதில்லை. ஏனென்றால், அந்த ஆடவர் யாக்கோபின் தொடைச்சந்துச் சதை நாரைத் தொட்டார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 17 : 1. 2 – 3, 6 – 7, 8, 15**

**பல்லவி: நானோ நேர்மையில் நிலைத்திருந்து உமது முகம் காண்பேன்.**

1. ஆண்டவரே, என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும். என் வேண்டுதலை உற்றுக் கேளும். வஞ்சகமற்ற உதட்டினின்று எழும் என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். பல்லவி
2. உம் முன்னிலையினின்று எனக்கு நீதி கிடைக்கட்டும். உம் கண்கள் நேரியன காணட்டும். என் உள்ளத்தை ஆய்ந்தறியும். இரவு நேரத்தில் எனைச் சந்தித்திடும். என்னைப் புடமிட்டுப் பார்த்திடும். தீமை எதையும் என்னிடம் காண மாட்டீர். என் வாய் பிழை செய்யக் கூடாதென உறுதி கொண்டேன். பல்லவி
3. இறைவா, நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றேன். ஏனெனில், நீர் எனக்குப் பதில் அளிப்பீர். என் பக்கம் உம் செவியைத் திருப்பியருளும். என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும். உமது வியத்தகு பேரன்பைக் காண்பித்தருளும். உம்மிடம் அடைக்கலம் புகுவோரை அவர்களுடைய எதிரிகளிடமிருந்து உமது வலக்கரத்தால் விடுவிப்பவர் நீரே! பல்லவி
4. உமது கண்ணின் மணியென என்னைக் காத்தருளும். உம்முடைய சிறகுகளின் நிழலில் என்னை மூடிக்கொள்ளும். நானோ நேர்மையில் நிலைத்திருந்து உமது முகம் காண்பேன். விழித்தெழும் போது, உமது உருவம் கண்டு நிறைவு பெறுவேன். பல்லவி

**<u>நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:</u> (யோவான்: 10:4)**

அல்லேலூயா, அல்லேலூயா!
நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்.
என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன.
அல்லேலூயா.

**<u>நற்செய்தி வாசகம்:</u>**

அறுவடை மிகுதி. வேலையாள்களோ குறைவு.

**✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 9 : 32 – 38**

அக்காலத்தில் பேய்பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாத அவர் பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, "இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை" என்றனர். ஆனால் பரிசேயர், "இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான்" என்றனர்.

இயேசு நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றி வந்தார். எங்கும் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார். விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார். நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்.

திரண்டிருந்த மக்களை அவர் கண்ட போது அவர்கள் மேல் பரிவு கொண்டார். அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள். அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி, “அறுவடை மிகுதி. வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்” என்றார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

மக்கள் தேவைகள் பல, நீயும் தேவை. இன்று மக்கள் கூட்டத்திற்குக் குறைவே இல்லை. எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். பேருந்து நிலையத்தில் கூட்டம். மருத்துவமனையில் கூட்டம். ரேசன் கடையில் கூட்டம். வணிக வளாகத்திலும் கூட்டம். அரசியல்வாதிக்கு ஒரு கூட்டம். ஆன்மீகவாதிக்கும் ஒரு கூட்டம். கிராமத்திலும் கூட்டம், நகரிலும் கூட்டம். கூட்டம் கூடுவதெல்லாம் வேடிக்கை பார்க்கத்தானே? வேதனையில், தேவையில் இருப்போரைத் தேடிச்சென்று தேற்றுவார் யார் உளர்? பாதிக்கப்பட்டோர் மேல் பரிவு கொள்வோர் யாரேனும் உளரா? இயேசுவின் சிந்தனை இக்கூட்டத்தைத் தேடுகிறது. மக்கள் தேவைகளை நிறைவு செய்யும் நல்ல தொண்டர்கள் தேவை. தொண்டு செய்வதைத் தொழிலாகக் கொண்ட தலைவர்கள் தேவை. குடும்பத்தைப் பொறுப்புடன் ஏற்று நடத்தும் குடும்பத் தலைவர்கள் தேவை.

மக்களின் பிற எல்லாத் தேவைகளையும் குறைகளையும் விட ஆயனில்லா ஆடுகள் போல் இருந்தது தான் மிகப்பெரும் குறை என்பது இயேசுவின் கணிப்பு. நல்ல ஆயர்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் நம்மிடையே உருவாவார்களாயின், பாதிக்கப்பட்டோரின் கூட்டம் குறையும். பரிவு கொள்ளும் இதயம் கொண்டவர்கள் கூடுவார்களாயின் ஆதரவற்றோர், அபலைகள், துன்புறுவோர், நோயுற்றோர் இவர்களின் கூட்டம் தானாகவே குறையும். ஏன் நீ அந்த ஆயனாக இருக்கக் கூடாது?

**********